




# ஒரு நாளைக்கு திண்டுக்கல்லில் மட்டும் இரண்டு லட்ச ரூபாய்க்கு மேல் பிரியாணி விற்கப்படுகிறது!



ராமச்சந்திரன்
பொன்ராம் பிரியாணி ஸ்டால்

கிடைக்கற மாதிரி ஆகிடும். கரண்ட் பிரச்னையால ஆறுமணி நேரத்துக்கு மேல மில்லை ஓட்ட முடியலை. எங்க விண்ட் மில் மூலமா வர்ற மின்சாரத்தை ஒழுங்கா கொடுத்தாலே போதும். நாங்க பொழைச்சுக்கிடுவோம். அல்லது ஜெனரேட்டர் ஓட்ட டீசல் மானியம் கொடுக்கணும். அரசாங்கம் மனசு வைக்கணும்"னு குரல் கரகரக்கச் சொன்னாரு. எந்த ஊருக்குப் போனாலும் கரண்ட் விவகாரம் ஷாக் அடிக்கத்தான் செய்யுது.

லேசா பசி வயித்தை பிராண்டுச்சு. 'பிரியாணிக்கு பேர்போன ஊராச்சே'னு 'பொன்ராம் பிரியாணி கடை'யைப் பார்த்து உள்ளே புகுந்து வெட்டினேன். பில்லைக் கொடுத்துட்டு கல்லாவில் இருந்த ராமச்சந்திரன்கிட்ட சாப்பாடு சூப்பர்னு வாழ்த்தைச் சொன்னேன்.

"சாப்பாடு மட்டுமில்லே... சர்வீஸும் சூப்பரா இருந்தாத்தான் இந்த ஊரில் பொழைக்கமுடியும். ஏன்னா, திண்டுக்கல் மக்கள் ருசிக்கு முக்கியத்துவம் கொடுக்கிற மாதிரியே உபசரிப்பையும் எதிர்பார்ப்பாங்க... இந்த ஊரு பிரியாணி ஃபேமஸாகிடுச்சு இல்லையா... அதனால், இந்த ஊரைத் தாண்டிப் போறவங்களுக்கும் பிரியாணி சாப்பிட ஆசை வருமே... அதை யோசிச்சு ஒரு திட்டம் போட்டோம்... ரயில்ல வர்றவங்க முன்கூட்டியே போன் பண்ணி, தன்னோட பேரு, வண்டி பேரு, கோச் நம்பர், பெர்த் நம்பர் எல்லாத்தையும் சொல்லிட்டா... ரயிலுக்கே பிரியாணி போய்ச் சேர்ந்திடும். சராசரியா ஒரு நாளைக்கு திண்டுக்கல்ல மட்டும் ரெண்டு லட்ச ரூபாய்க்கு மேல பிரியாணி விக்குதுன்னா பார்த்துக்கோங்க..."னு சொன்னதும் அடேங்கப்பானு வாயைப் பிளந்துட்டேன்.

சாப்பாட்டுக்கே இப்படின்னா மத்த விஷயங்களை எப்படி இருப்பாங்களோனு யோசனையோடு நடையைப் போட்டப்போ 'ரெலிகர்' பங்குத் தரகு ஆபீஸ் கண்ணுல பட்டது. உள்ளே போய் விசாரணையைப் போட்டேன்.

